# கிறித்தவ இலக்கிய வெளியில் மனித மதிப்பீடுகள்

## பன்னாட்டுக் கருத்தரங்கு

தொகுதி - 3



தமிழ் உயராய்வு மையம்

பாத்திமா கல்லூரி (தன்னாட்சி)

மதுரை - 18

# கிறித்தவ இலக்கிய வெளியில் மனித மதிப்பீடுகள்

**( பன்னாட்டுக் கருத்தரங்க கட்டுரைகளின் தொகுப்பு )**

**ISBN: 978-93-87865-06-8**

தொகுதி - 3

**( 28.9.2018, 29.9.2018 ஆகிய இரு நாட்களில் நடைபெற்ற பன்னாட்டுக் கருத்தரங்கில் தமிழ்த்துறையினரால் வெளியிடப்பட்டது )**

பதிப்பாசிரியர்கள்

முனைவர் **ஆ. பாப்பி கமலா பாய்,** தமிழ்த்துறைத் தலைவர்

முனைவர் **சி. அருள் மைக்கேல் செல்வி**

முனைவர் **இரா. டயானா கிறிஸ்டி**

முனைவர் **இரா. ஏஞ்சல்**

திருமதி **பா. திவ்யா**

திருமதி **டே. ஆனி மரிய ஜான்சி**

வெளியீடு

## தமிழ் உயராய்வு மையம்

## பாத்திமா கல்லூரி (தன்னாட்சி)

**மதுரை - 18**

| | | | |
|---|---|---|---|
| 35. | முனைவர் தமிழ்செல்வி, ப. | இயேசுகாவியம்-மலைப்பொழிவில் மனித மதிப்பீடுகள் | 125 |
| 36. | செல்வி தாட்சாயனி, ம. | இயேசுகாவியம் காட்டும் இறைமகனின் அன்பு | 129 |
| 37. | முனைவர். நிர்மலா செல்வி, வே. | இயேசுகாவியம் சுட்டும் அன்பு | 132 |
| 38. | முனைவர் பாப்பா, மா. | இயேசு காவியத்தில் மனித மாண்புகள் | 136 |
| 39. | முனைவர் சகோ. மங்கள சுந்தரி, க. | எஸ்தர் காவியத்தில் மானுட மதிப்பீடுகள் | 139 |
| 40. | முனைவர் ரில்பர்ட் ஜெனார்த்தனன், வ. | இயேசு காவியத்தில் உவமைகள் ஏற்படுத்தும் கருத்தியல் | 142 |
| 41. | முனைவர் ரேணுகா, நா. | இறவாக் காவியத்தில் மனித மாண்புகள் | 145 |
| 42. | திருமதி ரேவதி, க. | உலகிற்கு வழிகாட்டும் உவமைகள் | 149 |
| 43. | முனைவர் லதா, தா. | அன்னைதெரசா நிகழ்வுகளில் மனிதம் | 152 |
| 44. | செல்வி லட்சுமி பிரியா, லோ. ரா. | சிலுவையின் பாடுகள் வழி “மனிதம்” | 155 |
| 45. | திருமதி ஜான்சி, பா. | கண்ணதாசனின் இயேசுகாவியத்தில் வாழ்வியல் நெறிகள் | 159 |
| 46. | ஜெயசாந்தி, ஜெ. | இயேசு காவியத்தில் மனித மதிப்புகள் | 163 |
| 47. | ஜெயபூர்ணிமா, வே. | சர்வசமய சமரசக் கீர்த்தனையில் முக்தி | 167 |
| **பிற** | | | |
| 48. | முனைவர் பணி. அன்பரசு, ம., சே.ச. | இஸ்லாமிய கிறித்தவச் சமயங்கள் முன்வைக்கும் அறச்சினம் குறித்த பார்வைகள் | 171 |
| 49. | திரு ஆனந்த், பி. | கிறித்தவ வழிபாட்டுப் பாடல்களில் அன்பு | 174 |
| 50. | முனைவர் அருள்தந்தை இருதயராஜ், சே.ச. | ஸ்டெர்லைட் போராட்டத்தில் மனித உரிமை மீறல்கள்; நம்வாழ்வு இதழின் பதிவுகளும் பார்வைகளும் | 177 |
| 51. | திரு. காளிஸ்பிரபு, க. | தமிழ் இலக்கண மரபில் தொன்னூல் விளக்கம் | 182 |
| 52. | திருமதி சத்தியப்பிரியா, பொ. | கிறித்துவம் காட்டும் மனித மதிப்பீடுகள் | 185 |
| 53. | திரு. பால்ராஜ், பி. | கிறித்தவம் வெளிப்படுத்தும் அன்புநெறி | 188 |
| 54. | முனைவர் பூங்கொடி, சு.ர. | வில்லுப்பாட்டில் பெண்களின் மதிப்பீடுகள் | 191 |
| 55. | முனைவர் மோட்ச ஆனந்தன், ம. | கிறித்துவச் சிந்தனையில் அயோத்திதாசப் பண்டிதரும் தந்தை பெரியாரும். | 194 |
| 56. | Dr. V. Suganya | MARIAN VIRTUES IN CONTEMPORARY WORLD | 196 |

# இயேசு காவியத்தில் மனித மாண்புகள்

முனைவர் மா. பாப்பா
உதவிப்பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம்
பாத்திமாக் கல்லூரி, மதுரை

தமிழ் இலக்கியங்கள் அனைத்தும் மக்களின் வாழ்வினைப் படம்பிடித்துக் காட்டும் கண்ணாடியாகும். இத்தகைய இலக்கியங்கள் ஒவ்வொன்றும் சமுதாயத்திற்கு ஏற்ற வகையில் நற்கருத்துக்களை வெளிப்படுத்துகின்றன. பண்டைக் காலத்தில் மக்கள் கூட்டமாக வாழ்ந்திருக்கிறார்கள். இவ்வாறு கூடி வாழ்ந்த மக்களிடையே அன்பு, மன்னிக்கும் குணம், மனிதநேயம், பொறுமை, ஒருமைப் பண்பு ஆகிய மனித மாண்புகளை இயேசு காவியம் மூலம் ஆய்வதே ஆய்வின் நோக்கம் ஆகும்.

**அன்பு**

தமிழரின் வாழ்வியல் கோட்பாடுகள் பலவற்றினுள்அன்பு முக்கியமானதொரு கூறாகும். உயிரின் இயக்கமே அன்பால் இயங்குகிறதை 'அன்பின் வழியது உயர்நிலை' என வள்ளுவர் சுட்டுவதைக் காணமுடிகிறது. மனிதன் அகவாழ்விலும் அன்புதான் உயிர்மூச்சு என்பதை,

**"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கைப்**
**பண்பும் பயனும் அது."**

என்றும்

**"அறத்திற்கே அன்புசார்பு என்பார் அறியார்**
**மறத்திற்கும் அ∴தே துணை."**

என்று அறம், மறம் இரண்டிற்கும் அன்பே அடிப்படை என்பதை உலகிற்கு உணர்த்தியது தமிழினமாகும். இவ்விடத்தில் அன்புடனான வாழ்க்கையே வாழ்வினை முழுமையடையச் செய்யும் கருவியாக இருப்பதைக் கண்ணதாசன் இயேசு காவியத்தில் வெளிப்படுத்துகிறார்.

**"அன்புசெய்தாருக்கு அன்பு - என்றால்**
**ஆனந்தம் அதிலென்ன உண்டு?**
**அன்பற்ற பேருக்கு அன்பு - செய்தால்**
**அதுவன்றோ மானிடப் பண்பு."**

என்று அயலானையும் அன்பு செய்து வாழ்ந்து காட்டி வாழ்வில் முழுமைபெற்றவர் இயேசுநாதர். மேலும்,

**"உன்னொரு கன்னத்தில் இட்டால் - நீ**
**ஓங்கி அடித்து விடாதே**
**இன்னொரு கன்னத்தைக் காட்டு - இது**
**என்றென்றும் ஞானத்தின் பாட்டு."**

என்று அன்பு வழியில் தான் வாழ்ந்து, பிறருக்கும் வழிகாட்டினார் இயேசுநாதர் என்பதை உணரமுடிகிறது.

**மன்னித்தல்**

மன்னிக்கும் பண்பே மகத்தானது. தவறு செய்தவர்களும் மன்னிக்கப்படுவர் அவர்களுக்கும் பாவமன்னிப்பு உண்டு பண்புடையவர்களாக வாழலாம் எனத் தன்னம்பிக்கையை ஊட்டி வாழ்ந்து காட்டியவர் இயேசுநாதர்.

**"தன்னரியத் திருமேனி சதைப்புண்டு தவிப்பெய்திப்**
**பன்னரிய பலபாடு படும்போது பரிந்தெந்தாய்**
**இன்னதென அறிகிலார் தாம்செய்வ திவர்பிழையை**
**மன்னியுமென் றெழில்கனிவாய் மலர்ந்தார் நம் அருள்வள்ளல்."**